1970 ஆகஸ்ட் 28]

ஆனால், புதிய வரி விதித்தல், நடைமுறையில் உள்ள வரி வீதங்கள் அண்டை மாநிலங்களின் வரி வீதங்களை ஒத்திருக்கும் வகையில் அமைத்தல், பாசன வீதங்களையும், மின்சக்திக் கட்டணங்களையும், தீர்வைகளையும் மாற்றியமைத்தல் ஆகியவை உட்பட பல்வேறு வகைகள் மூலம் கூடுதல் நிதி வாயில்களைத் திரட்டுவது குறித்த சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்யுமாறு மாநில அரசுக்கு அது ஆலோசனை வழங்கியுள்ளது. மேலும், (மாநில அரசுப் பரிசுச் சீட்டுகள்) பணித்திட்டங்களுடன் இணைக்கப்பட்ட கையடைத் தொகைகள், கடன்கள் (கடனீட்டு ஆவணங்கள் உள்பட) போன்ற கிராமப்புறச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கான சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வருவது குறித்து வாய்ப்புகளைப் பரிசீலனை செய்யுமாறும் மாநில அரசுக்குத் திட்டக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அந்த யோசனையின்மீது மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக நிதி வாயில்களைத் திரட்டுவதற்கான யோசனைகள்தான் இவை. அடிக்கடி நிதி வாயில்களைத் திரட்டுவதற்காக மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் முயற்சிகளை மேற்கொள்கின்றன. இவை பொதுவான யோசனைகள். அதிகமான வரி போடுவது, மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது, பொது நிறுவனங்களிலே லாபம் பெருகச் செய்வது இப்படி யெல்லாம் இருக்கின்றன. நிஜலிங்கப்பா கமிட்டி, வெங்கட்டராமன் கமிட்டி யெல்லாம் யோசனை சொல்லி இருக்கிறார்கள். நான் எடுத்துக் கொண்ட முயற்சி கடந்த பட்ஜெட்டிலே சிறிய வரி விதிப்புகளின் மூலமாக ஏறக்குறைய ஐந்தரைக் கோடி ரூபாய் பெறக்கூடிய அளவிலே செய்ததாகும்.

தமிழ் நாடு முதல் அமைச்சர் நிதி

* 92 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ல் தமிழக முதல் அமைச்சர் நிதி எவ்வளவு சேர்ந்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதலமைச்சரின் மாநிலத் துயர்தணிப்பு நிதியில் 1969-70 ஆண்டில் 1,19,821.63 சேர்ந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த முதல் அமைச்சர் நிதி 1969–70-ம் ஆண்டில் எந்த எந்த வகையிலே செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1969–70-ம் ஆண்டிலே ரொம்ப முக்கியமாக ஒரு காரியத்திற்கு மட்டும்—எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார் கான் அவர்களுக்கு—இந்த முதலமைச்சர் நிதியிலிருந்து 1 லட்ச ரூபாய் வழங்கப்பட்டது. முதலமைச்சர் நிதி என்பதே பொதுமக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டிருப்பதுதான். இது 1967-ம் ஆண்டிலே மாண்புமிகு அண்ணா அவர்களால் துவங்கப

பட்டது. இந்த ஆண்டிலே எல்லைப்புற காந்தி அவர்களிடம் 1 லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிக்காக பொதுமக்கள் கொடுத்தது ரூ. 1 லட்சத்து 28,600 ரூபாய் ஆகும். அதிலே 1 லட்சம் ரூபாய் கொடுத்தது போக மீதி உள்ளதை கணக்கில் வரவு வைத்து

Cheque issued in favour of Chief Minister, Andhra Predesh for Cyclone Relief—Rs. 10,000,00.

Donation to the widow of Thiruvengatam, who died in Madras City in the Police firing at Rajaji Hall on 3rd February 1969—Rs. 5,006.25.

Donation to Thiru K. Selvaraj, Thadikombu village, Dindigul on compassionate grounds as he has lost his eyes in small-pox—Rs. 100.25.

Cheque issued in favour of the Mayor of Madras for providing relief to the hut-dwellers in the low-lying areas in Madras City due to the heavy rains—Rs. 5,000.00.

Donation to the "Pilot Demonstration Rehabilitation Centre for Blind and Optical aid evaluation Unit, Madurai Medical College"—Rs. 5,000.00.

Donation to Khan Abdul Ghaffar Khan—Rs. 1,00,000.00.

Donation to Thirumathi Lakshmi Ammal, wife of late Thiru Sankaranarayanan, Havildar Special Armed police, who expired during the Republic Dey parade. Rs.—3,000.00.

Donation to Thiru A. Ramaswamy Chettiar, Bodinayakkanur, consequent on the death of his son in Police Firing at Cumbum on 12th February 1965 during the Anti-Hindi agitation—Rs. 500.00.

ஆக மொத்தம் ரூ. 1,28,606.50. அந்த நிதியிலிருந்து வழங்கப் பட்டது.

திரு. கே. பி. எஸ். மணி: திரு. கான் அப்துல் கபார் கான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணத்தை அவர்கள் போவதற்கு முன்னால் தமிழ்நாட்டிலே கொடுத்துவிட்டுப் போனதாகவும் ஏதோ ஒரு ஸ்தாபனத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டதே உண்மையா? இல்லையென்றால் அவர்கள் தன்னோடு எடுத்துக்கொண்டு போய்விட்டார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதற்கும் நிதியமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை. நல்ல காரியங்களுக்காக அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அவர்களுக்குப் பணம் கொடுத்தோமே தவிர, எப்படிச் செலவழித்தார் என்ற விவரங்கள் தெரியாது. நமக்கு அது சம்பந்தமில்லை.

திரு. எம். சுரேந்திரன்: இந்த முதலமைச்சர் நிதி என்பது முதலமைச்சரின் விருப்பத்தைப்போல் செலவுசெய்வதற்கான நிதியா? அல்லது செலவு செய்வதற்கு வழிமுறைகள் உண்டா?

1970 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கேள்வியே தவருகக் கேட்கிருர்கள். முதலமைச்சர் என்று சொன்னுலே முதலமைச்சர் அவர்களின் தனிவிஷயமல்ல. நாம் பொதுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிருேம். முதலமைச்சர் அவர்கள் பொதுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு இருக்கிருர்களே தவிர முதல் அமைச்சர் என்று சொன்னுல் ஏதோ அவருடைய வீட்டுக்கணக்கு அல்லது தோட்டக்கணக்கு அல்ல. முதலமைச்சர் நிதி என்பதை பல நல்ல காரியங்களுக்காக நாம் பயன் படுத்திக்கொண்டு வருகிருேம். இராஜஸ்தான் முதலமைச்சர் திரு. சுகாடியா அவர்கள் இங்கு வந்திருந்தபொழுது நல்லெண்ணத்தின் அடிப்படையிலே அங்கு ஏற்பட்ட வறட்சிக்காக 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தோம். அண்ணு அவர்கள் காலத்திலே இது துவங்கப்பட்டது. பொதுமக்கள் இதற்குப் பணம் கொடுக்கிருர்கள். இந்த நிதிக்காக பொதுமக்கள், சினிமா அதிபர்கள் ஆகியவர்களிடமிருந்து முதலமைச்சர் பெற்றிருக் கிருர்கள் ; இந்த நிதியில் 1 லட்சத்து 28,600 ரூபாய் கொடுக்கப் பட்டது. அதில் கான் அப்துல் கபார் கான் அவர்களுக்கு 1 லட்சம் ரூபாயும் மீதியுள்ளதை அந்தக் கணக்கிலேயும் போடப்பட்டது. இந்த நிதியைப் பொறுத்தவரையில் லோக்கல் பண்ட் ஆடிட்டர் அவர்கள் தணிக்கை செய்கிருர்கள். இந்த வகையிலே காரியங்கள் நடைபெறு கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) தஞ்சாவூர் மேற்கு போலீஸ் நிலையத்தில் காவலிலிருந்த ஒரு பெண் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கொ. இர. ஞானசம்பந்தன் அவர்கள், தஞ்சாவூர் மேற்கு போலீஸ் நிலையத் திலே ஜமீலா என்ற ஏழைப்பெண் காவலிலிருந்ததுபற்றி ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். அதைப்பற்றிச் சுருக்க மாகச் சொல்லவேண்டும்.

* திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பேரவைத் தலைவர் அவர் களே, திண்டிவனத்தைச் சேர்ந்த ஜமீலா என்ற பெண் தஞ்சைக்குச் சென்றபொழுது கைதுசெய்யப்பட்டு தஞ்சாவூர் மேற்கு போலீஸ் நிலையத்திற்கு அவள் கொண்டுசெல்லப்பட்டு அவளிடம் காவலர்கள் தகாத முறையிலே முரட்டுத்தனமாக நடந்துகொண்டதன் காரண மாக உயிர் ஊசலாடிய நிலையில் கட்டாயப்படுத்தி விஷம் கொடுத்து விட்டு, அவளே விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டதாக ரிகார்ட் செய்யப்பட்டுள்ளது. இதையறிந்த தஞ்சை மக்கள் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள், இது